ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1939/30 – 2015 නොවැම්බර් 06 වැනි සිකුරාදා – 2015.11.06
*1939/30 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின்படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் முனசிங்ஹ காரியவசம் அப்புஹாமிலாகே தொன் சோமதாச குணவர்தன ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், கம்பஹசியபத்துவ சிறுபிரிவில், ரஜ்ஜம்மன (க.கி.வ. 25) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2015.02.25 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட எம்ஏ/எம்ரீஎல்/2014/337 ஆம் இலக்கம் கொண்ட முதற்சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 0.5059 ஹெக்டயார் விஸ்தீரண முடைய 'ரஜ்ஜம்மன பெருந்தோட்டம்' எனும் காணித்துண்டின் எல்லைகள்:

1. துண்டு 'ஏ' - ரஜ்ஜம்மன பெருந்தோட்டம் - **விஸ்தீரணம் : 0.5059 ஹெக்டயார்**

வடக்கு : ஹல்கஹவத்தே வலவ்வே குணபால உரிமை கோரும் இக்காணியின் எஞ்சிய பகுதி; கிழக்கு : ஹல்கஹவத்தே வலவ்வே குணபால உரிமை கோரும் இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் பிரதேச சபை வீதி; தெற்கு : அங்குலுவே கெதர கருணாரத்ன உரிமை கோரும் ரஜ்ஜம்மன பெருந்தோட்டம் எனும் காணி; மேற்கு : சிங்ஹனகல்பொத்தே எல.

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,
காணி அமைச்சர்.

எனது குறிப்பு இல. : 4-3/9/2013/டபிள்யூஎஸ்/474.
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015.10.05.

11-616

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.